**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 179/2019**

நாள் 11.06.2025

DW2 – ராகவி

க/பெ – பிரேம்குமார்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of June 2025.)**

**குறுக்கு விசாரணை**

1. வாதி எனது அத்தை. இந்த வழக்கு பற்றிய விபரம் எனக்குத் தெரியும். பிராதுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை தான் என்றால் சரிதான். தாவா சொத்து எங்களது பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும், எனது சித்தப்பாவிற்கும் இடையே சொத்தை பாகம் பிரிப்பதற்கு முன்பாகவே நான் பிறந்து விட்டேன் என்றால் சரிதான். நானும், எனது அம்மாவும் 2018–ம் ஆண்டு வரையில் தாவா சொத்தில் குடியிருந்து வந்தோம். தாவா சொத்தில் உள்ள 3 கடைகளில் ஒரு கடைக்கு எனது சித்தப்பா குமார் வாடகை வாங்கி வந்தார், மற்றொரு கடைக்கு எனது அப்பா சண்முகசுந்தரம் வாடகை வாங்கி வந்தார், மற்றொரு கடைக்கு வாதி அலமேலு வாடகை வாங்கி வந்தார். எனது அப்பா இறந்த பிறகு எனது தாயார், சித்தப்பா குமார் மற்றும் நானும் சேர்ந்து கூட்டாக வாடகை வாங்கி வந்தோம். தற்போது வரையில் நான் மகாலிங்கம் என்பவரிடமிருந்து வாடகை வாங்கி வருகிறேன்.

2. தாவா சொத்தின் சுவாதீனம் என் வசம் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். வாதி, 1–ம் பிரதிவாதி, எனது தகப்பனார் மற்றும் பாட்டி ஆகியோர் யாருக்கும் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு

உண்மையானது என்றால் சரிதான், அதனால் தாவாவில் கோரிய படி தீர்ப்பாவதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

**(4,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.11 19:08:39 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**